# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.

தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

*************

முறையீட்டு மனு எண்: 0091/2017/ந

ஆணை எண்: 075/2017

நாள்: 25/04/2017

திரு. ஆ.செ. மோகன்,
எண் 8, முதல் தெரு,
தி.க.லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044. - முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி மற்றும் பிறர். – எதிர் மனுதாரர்

## ஆணை

முறையீட்டு மனுதாரரது 10.04.2017 நாளிட்ட முறையீட்டு மனு 11.04.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்று முறையீட்டு மனு எண்.091/17 ஆக பதிவு செய்யப்பட்டது.

முறையீட்டு மனுவில் பல்லவபுரம் நகராட்சியில் 01.01.2013 முதல் 10.04.2017 வரை வியாபார நிறுவனங்களிடமிருந்து கழிவுகளையும், குப்பைகளையும் எடுத்து சுத்தம் செய்ய பெறப்பட்ட கட்டணத் தொகைக்கான பணம்பற்று இரசீதுகளை இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு தாக்கல் செய்ய நகராட்சிக்கு உரிய உத்தரவிடுமாறும், இழப்பீடுகளை நகராட்சி அதிகாரிகளிடம் வசூல் செய்யவும் உத்தரவிடுமாறும் கோரப்பட்டுள்ளது. முறையீட்டு மனுவில் நகராட்சி அலுவலர்கள் மீது ஆதாரங்களுடன் கூடிய முறைகேடுகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை மாறாக 01.01.2013 முதல் 10.4.2017 வரை வியாபார நிறுவனங்களிடமிருந்து கழிவுகளையும், குப்பைகளையும் எடுத்து சுத்தம்

செய்ய பெறப்பட்ட கட்டணத் தொகைக்கான பணப்பற்று இரசீதுகளை இம்முறைமன்ற நடுவம் முன்பாக தாக்கல் செய்ய உத்தரவிடக் கோரியுள்ளது ஏற்புடையதல்ல.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டினை குறிப்பாகவும், தெளிவாகவும் தெரிவிப்பதை விடுத்து இம்முறைமன்ற நடுவம் எவ்வாறான உத்தரவிட வேண்டுமென கோருவது ஏற்புடையதன்று. மேலும், மனுதாரர் தான் விரும்பும் தகவல்களை தேவைப்படின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நகராட்சியிலிருந்து கோரிப் பெற்று, முறைகேடுகள் ஏதுமிருப்பதாக கருதினால் அது குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு முறைப்படி முறையீட்டு மனு தாக்கல் செய்து கொள்ளலாம் என சுட்டிக்காட்டி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25-ம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு. அ.செ. மோகன்,
   எண் 8, முதல் தெரு,
   தி.சு.லட்சுமணன் நகர்,
   குரோம்பேட்டை,
   சென்னை – 600 044.

2. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை,
   சென்னை – 600 044.